# வாக்குமூலம்

## சார்பு நீதிமன்றம் , நான்குநேரி

## வழக்கு எண்:SC- 62/2024

## வழக்கு சாட்சி:PW -1

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ராஜா ராம் | தேதி : | 03.10.2024 |
| தந்தை பெயர்: | ராம சுப்பு | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுக்கா: | | வயது: | |

(எதிரி ஆஜர்).

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 in the day 03.10.2024.

**முதல் விசாரணை**

நான் களக்காட்டில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். நான் சம்பவ காலத்தில் படலையார் குளம் நான்குநேரி மெயின் ரோட்டில் உள்ள பொன் கணபதி என்ற பெயரில் சாமில் வைத்துள்ளேன். படலையார் குளம் கிராமம் சர்வே எண்.409/1 ல் அயன் புஞ்சை 58 செண்டு நிலமானது எனது தகப்பனார் ஆண்டனுபவித்து அதன்பின்பு 1997 ம் ஆண்டு என் பெயருக்கு நன்கொடை ஆவணம் பிறப்பித்து கொடுத்து அது முதல் சுமார் 30 வருட காலமாக காம்பவுண்ட் சுவர் அமைத்து என் அனுபவத்தில் இருந்து வருகிறது. இந்த நிலையில் எதிரி அந்த இடம் தனது குடும்ப சொத்து என்று சொல்லி என்னிடம் தகராறு செய்து வந்தார். கடந்த 05.03.2013 ம் தேதி காலை சுமார் 10 மணியளவில் நான் சாமில்லில் இருக்கும் போது எதிரி ஆழ்வார் கோனார் மகன் பாலகிருஷ்ணனும் அவருடன் பார்த்தால் அடையாளம் காட்டக்கூடிய ஐந்து பேர்கள் வந்து எனது காம்பவுண்ட் சுவரை இடித்து சேதப்படுத்தினார்கள்.

நானும் எனது சாமில்லில் வேலை செய்து கொண்டிருந்த களக்காடு ஜே ஜே நகரை சார்ந்த சுடலையாண்டி கோனார் மகன் முருகன் பஸ் ஸ்டாண்டு கீழ தெரு நடராஜன் மகன் முத்து ஆகியோருடன் ஏன் இடிக்கிறீர்கள் என்று கேட்டதற்கு எதிரி என்னை பார்த்து தேவடியா மகனே செரிக்குள்ள என்று அசிங்கமாக பேசி அவமானப்படுத்தி அப்படித்தான் இடிப்பேன் தடுத்தால் கடப்பாறையால் அடித்து கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டினார். நாங்கள் சத்தம் போடவும் எதிரியும் அவருடன் வந்தவர்களும் என்னை பார்த்து இன்று தப்பிவிட்டாய் உன்னை கொலை செய்யாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார். அவர்களால் எனக்கு ஏதாவது ஆகிவிடுமோ என்று உயிர் பயம் ஆகிவிட்டது. அதனால் அன்றைய தினம் 12 மணிக்கு களக்காடு காவல் நிலையம் சென்று எதிரி மீது நடவடிக்கை எடுக்க சொல்லி புகார் மனு கொடுத்தேன். எதிரிகள் சேதப்படுத்திய சுவரின் மதிப்பு சுமார் ரூ.3 ஆயிரம் இருக்கும். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனு என்னால் எழுதப்பட்டதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு நன்றாக தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். என்னிடம் காட்டப்படும் கல்தான் எதிரி சேதப்படுத்தி உடைந்த ஹாலோபிளாக் சிமெண்ட் கல் இதுதான். இன்று என்னால் நீதிமன்றத்தில் அடையாளம் காட்டப்பட்டது. அந்த ஹாலோபிளாக் சிமெண்ட் கல் சா.பொ.1 ஆகும். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.